# 2. வினாக்கள்—விடைகள்

## உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**1—**

### சிறுசேமிப்பு

***5110—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

*மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழகத்திற்குப் பயன்தரும் சிறுசேமிப்புத் துறை மூலமாகத் திரட்டப்படும் சிறுசேமிப்புத் தொகையைப் பெருக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*தமிழகத்தில் அஞ்சலகங்களில் செயல்படும் சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாகத் திரட்டப்படும் தொகையைப் பெருக்குவதற்கு மாண்புமிகு அம்மாவின் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதற்கண் எனது அன்பான புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழகச் சிறுசேமிப்புத் துறையிலே ஈட்டப்படக்கூடிய வருவாயை மத்திய அரசு, மாநில அரசுக்கே மானியமாக வழங்குகிறது. 2005–2006 ஆம் நிதியாண்டில் 5,594.13 கோடி ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. ஆனால், அதற்குப் பிறகு சிறுசேமிப்புத் துறைமூலமான வருமானம் குறைந்து கொண்டே வருகிறது. 2010–2011 ஆம் நிதியாண்டில்*

ரூ. 516.32 கோடியாக வருவாய் குறைந்துவிட்டது. இதற்கான காரணம் கிசான் விகாஸ் பத்திரம், National Savings Schemes, R.D. போன்றவற்றிற்கு Post Office–இல் இருந்துகொண்டே கவுன்டரில் வரக்கூடிய வாடிக்கையாளர்களிடம் பணம் வசூலிக்கிறார்கள். ஏஜென்ட் வெளியே சென்று பணம் வசூலித்தால் நிச்சயமாக வருமானம் கூடும். Online System–ஐத் தெரிந்துகொண்டால் அதன்மூலமாக நல்ல வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவிப்பதோடு, நல்ல விழிப்புணர்வையும் ஏற்படுத்தி Schools, Colleges, தொழில் நிறுவனங்களிலுள்ள Employees, வியாபாரிகள் மற்றும் வணிகர்கள் மத்தியிலே Agent–களை நியமித்தால் நிச்சயமாக நல்ல வருமானம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை வைக்கிறேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் சேமிப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வட்டி விகிதம், அஞ்சலக சேமிப்புத் திட்டங்களுக்கு வழங்கப்பட்ட வட்டியைவிட அதிகமாக இருந்ததால் சிறுசேமிப்பு திட்டங்களின்மீது பொதுமக்களிடம் ஆர்வம் குறைந்திருந்தது. மேலும், 2007–2008 ஆம் ஆண்டிலிருந்து சிறுசேமிப்பிற்கான இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை. கடந்த ஆண்டுகளில் சிறு சேமிப்பிற்கான விளம்பரங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததாலும் விளம்பரங்கள் வழங்கப்படவில்லை. அதனால் மக்களிடையே விழிப்புணர்வு குறைந்திருந்தது. மேலும், மத்திய அரசு, முகவர்களுக்கான தரகுத் தொகையை, 1–12–2011–இலிருந்து குறைத்துள்ளது. ஆனாலும், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு முகவர்களுக்கான ஊக்கத் தொகையை 31–3–2012 வரை குறைக்காமல் முன்பிருந்த அளவிலேயே வழங்க உத்தரவிட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், சிறுசேமிப்புத் தொகையைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதும் கீழ்க்கண்டவாறு முகவர்கள்

உள்ளனர். நிலைப்படுத்தப்பட்ட முகவர் அமைப்புத் திட்டம், கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய்த் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம் 8–ஆவது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் ஆகியவற்றுக்கு 8,790 முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மகளிர் முகவர் திட்டத்தின்கீழ் தொடர் வைப்புத் திட்டம், அஞ்சலக தொடர் வைப்பு சேமிப்புத் திட்டத்திற்கு 21,699 முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின்கீழ், பொது வருங்கால வைப்பு நிதிக்கு 626 முகவர்கள் அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆக, பல்வேறு அஞ்சலக சேமிப்புத் திட்டங்களுக்காக 31,115 முகவர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். முகவர்கள் திரட்டும் முதலீடுக்காக அவரவர்களுக்குக் கீழ்காணும் விதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் தரகு மற்றும் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. மத்திய அரசு 1–12–2011 முதல் தரகுத் தொகை வீதங்களை மாற்றியமைத்துள்ளது. நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டத்தின்மூலமாக மத்திய அரசு 30–11–2011–க்கு முன்பாக ஒரு சதவிகிதம் தரகுத் தொகையை வழங்கிக்கொண்டிருந்தது. ஆனால், 1–11–2011 முதல் 0.5 சதவிகிதமாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, அந்த ஊக்கத் தொகையைத் தொடர்ந்து 0.5 சதவிகிதமாக வழங்கிக்கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போல, பொது வருங்கால வைப்பு நிதி முகவர் திட்டத்தின்கீழ் பொது வருங்கால வைப்பு நிதித் திட்டத்திற்கு ஒரு சதவிகிதம் முகவர் நிதியை மத்திய அரசு வழங்கிக் கொண்டிருந்தது. அது தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டத்தின்கீழ் 0.5 சதவிகிதம் தரகுத் தொகையை வழங்கிக் கொண்டிருந்த மத்திய அரசு இப்போது அதையும் நிறுத்தி வைத்திருக்கின்றது. ஆனால், சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிக்கும்பொருட்டு ஒன்றிய அளவு, மாவட்ட அளவு மற்றும் மாநில அளவில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் சிறுசேமிப்பு முகவர்கள் மற்றும் மாவட்ட மற்றும் மாநில அளவில் சிறந்து விளங்கும் சம்பளப் பட்டியல், சேமிப்புத்

திட்டக் குழுத் தலைவர்கள் ஆகியோருக்குச் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்கப்படுத்துகின்ற வகையில் வெகுமதிகள் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். என்னுடைய கேள்வி* online–*ஐ அறிமுகப்படுத்தினால் நிச்சயமாக அதிக அளவிலே நம்முடைய சேமிப்பு அதிகமாகும் என்பதுதான். ஆகவே, அதற்கான பதிலைத்தான் நான் எதிர்பார்க்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுசேமிப்புமூலம் சேமித்து வைக்கிற திட்டத்திற்கு நேரடியாக 31,115 முகவர்கள் நியமிக்கப்பட்டு, அவர்கள் நேரடியாக ஆங்காங்கே சென்று சிறுசேமிப்புத் திட்டத்தினுடைய பலன்களை எடுத்துச் சொல்லி சிறுசேமிப்புத் திட்டத்திற்கு அவர்கள் ஆதரவு தெரிவிக்கின்ற வகையில், முகவர்கள் அங்கே சென்று சிறுசேமிப்பு நிதியைப் பெறுகின்றார்கள். நேரடியாகவே சென்று அவர்கள் பெறுகின்ற சூழ்நிலையிலும்கூட, வட்டி விகிதம் குறைவாக இருக்கின்ற காரணத்தினால்தான் இந்தச் சரிவு ஏற்பட்டிருந்தது. இருந்தாலும், மாண்புமிகு அம்மாவுடைய அரசு தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள் சொன்ன கருத்து, அரசின் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*